சூத்திரம்
www.sooddram.com
The Formula



~~ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறுதிப் பெரும்பான்மை பெற்றது! ஜனநாயக~~



# 1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......

*நடந்த வன்கொடுமைகள்! (பகுதி 21)*

(கிறேசியன், நாவாந்துறை)

என்னை இந்த வதை முகாமுக்குக் கொண்டு வந்து நான்கு மாதங்கள் ஆகின. இந்த நான்கு மாதங்களில் இவர்கள் யாரையும் விடுதலை செய்யவில்லை. துணுக்காய் முகாமில் குறிப்பிடும்படியான நபர்கள்தான் சித்திரவதை செய்தனர். ஆனால் இங்கு அப்படியல்ல, பலபேர் இங்கு வந்து சித்திரவதை செய்து பழகிச் சென்றனர். இங்கு வரும் அனைத்துப் புலி விலங்குகளும் ஒரு விடயத்தில் ஒற்றுமையாகச் செயல்பட்டனர். அது என்னவென்றால், "தூஷணம் பேசுவதில்"! அம்புரோஸ் எங்கள் சகோதரர்களை அடிக்கும் போது மட்டும்தான் கெட்டவார்த்தைகளைப் பயன்படுத்துவார். ஏனையோர் பார்க்கும் போதெல்லாம் தூஷண வார்த்தைகளைத் தாராளமாக அள்ளி விதைப்பார்கள். படிப்பறிவு உள்ளவர்களாக இருந்தால் இப்படியான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கமாட்டார்கள் என்பது எனது கணிப்பாகும்.

நான்காவது மாத முடிவில் ஒருநாள் மாலைவேலையில் அனைவரும் தயாராக இருங்கள் என்று கூறினர். ஐந்து மணியளவில் ஓர் பட்டியலைப் படித்தனர். நாற்பது பேரது இலக்கங்கள் படிக்கப்பட்டன. அவர்களது கண்கள் கட்டப்பட்டன. வெளியே கொண்டு சென்று இரண்டு வான்களில் ஏற்றினர். அவர்கள் அனைவரையும் காந்தியின் இறச்சிக்கடைக்குக் கொண்டு சென்றனர்.

**உனக்கு நாடு இல்லை என்றவனைவிட நமக்கு நாடே இல்லை என்றவனால்தான் நான் எனது நாட்டை விட்டு விரட்டப்பட்டேன்.......**



ராஜினி திரணகம
MBBS(Srilanka)
Phd(Liverpool, UK)

**"அதிர்ச்சி ஏற்படுத்தும் சாமர்த்தியம் விடுதலைப்புலிகளின் வலிமை மிகுந்த ஆயுதமாகும்.** விடுதலைப்புலிகளுடன் நட்பு பூணுவது என்பது வினோதமான சுய தம்பட்டம் அடிக்கும் விவகாரமே. விடுதலைப்புலிகளின் அழைப்பிற்கு உடனே செவிமடுத்து, மாதக்கணக்கில்

ஈழச் சுவர்
தமிழ் நியூஸ் வெப்
பத்மநாபா
மலையகம்
பார்வை
அலை
தாயகம்
ஈழநாசம்
நெருப்பு
அதிரடி
அதிரடி மீடியா
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
ஆனந்தசங்கரி
விழிப்பு
ரெலோ நியூஸ்
உதயம்
தேனகம்
புளொட்
ஈபிஆர்எல்எவ் வெப்
விடிவெள்ளி
எங்கள் பூமி
இலங்கை கம்யூனிஸ்ட்
எங்களைப்பற்றி
General

சிறிது நேரத்தில் எங்களது இலக்கங்களைப் படித்தனர். எனக்கு வழங்கப்பட்டிருந்த இலக்கம் ஆர்:11 ஆகும்! நாம் எழுந்து வெளியே வந்ததும், கண்கள் கட்டப்பட்டன! எங்களைக் கொண்டு செல்லும் வான் சிறியது என்றபடியால் ஏழுபேரை ஏற்றினர். மூன்று நான்கு நிமிட ஓட்டத்தில் ஓர் வீட்டின் முன்நிறுத்தப்பட்டது. இறங்கும்படி பணித்தனர்.

இறங்கினோம்! இது நாம் முதலில் கேள்விப்பட்ட இருபாலை வதை முகாம் என்பதைத் தெரிந்துகொண்டோம். உள்ளே செல்லும்படி கூறிய அவர்கள் உள்ளே வந்ததும் கண்கட்டுகளை அகற்றினர். உள்ளே ஒரு ஹோல் இருந்தது. அதைச் சுற்றி ஐந்து அறைகள் இருந்தன. இந்த ஹோலுக்குள் பதினைந்து பேர் வரை விலங்குகளுடன் அமர்ந்திருந்தனர். புது வரவான எங்களைப் பார்த்து அனுதாபத்துடன் சைகை வரவேற்புக் கொடுத்தனர்! சிறிது நேரத்தில் ஏனைய சகோதரர்களையும் கொண்டு வந்தனர். அத்துடன் நாம் இருந்த அந்த விசாரணை முகாமை மூடிவிட்டனர் என்று வந்தவர்கள் கூறினர். இங்கும் அறையினுள்தான் என்னைப் போட்டனர். என்னுடன் இந்த அறையில் எட்டுப்பேரைப் போட்டனர்.

புலிவிலங்குகளுக்கென்று இந்த வீட்டின் அருகில் தனியாக ஒரு வீடு இருந்தது. இவை போக செம்பட்டை சலீம் (துணுக்காய் வதைமுகாம் பொறுப்பாளர்) வசிப்பதற்கென்று ஒரு வீடும் எங்கள் வீட்டிலிருந்து சுமார் அறுபது எழுபது அடி தூரத்தில் இருந்தது. சலீம் பதவி உயர்வில் வந்தாரா அல்லது, பணிஸ்மென்டில் இங்கு வந்தாரா என்று தெரியாது. ஆயினும் இவர்தான் இந்த வதை முகாமின் பொறுப்பாளர். ஆனால் இவர் யாரையும் விசாரிப்பதில்லை.

நாங்கள் இருந்த இந்தப் பகுதிக்குப் பொறுப்பானவர் கௌதமன். இவருக்குத் துணையாகச் செயற்பட்டவர்கள், சின்னக்கேடி, மஞ்சு, திசை, பாபு, மலரவன், மாசில் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் அல்லாமல் செம்பட்டை சலீமின் பகுதியிலும் பலர் இருந்தனர் சித்திரவதை செய்வதற்கென்று!

இங்கு ஓர் கிணறு இருந்தது. இந்தக் கிணற்றிலிருந்து சற்றுத் தள்ளி ஒரு நாவல் மரம் இருந்தது. கடுமையான சித்திரவதை செய்ய இந்த நாவல் மரத்தின் நிழலைத்தான் பயன்படுத்தினர் புலிவிலங்குகள். இவை அனைத்தையும் சுற்றி தகரத்தினால் சுவர் எழுப்பியிருந்தனர் வதை வல்லவர்கள். வெளியிலிருந்து யாரும் பார்த்துவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில் இந்தத் தடுப்பை ஏற்படுத்தியிருந்தனர். என்னால் விபரிக்க முடியாத சித்திரவதையை அனுபவித்தது இந்த வழமான இருபாலைச் சூழலில்தான்.

அவர்களின் குழுக்களில் இருந்து ஆலோசனை வழங்கி, கடிதங்கள் வரைந்து, கூட்டங்களில் பேசித்திரிந்து, அவர்களுக்கு அடிவருடிகளாக இருந்தவர்கள்மீது கூட சூசகமான எச்சரிக்கைகள், காலப்போக்கில் அவர்கள்மீது சந்தேகம் கொண்டு விடப்பட்டன………"

(முறிந்த பனை நூலில் இருந்து)

(இந் நூலை எழுதிய ராஜினி திரணகம விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் முக்கிய உறுப்பினரான பொஸ்கோ என்பவரால் 21-9-1989 அன்று யாழ் பல்கலைக்கழக வாசலில் வைத்து சுட்டு கொல்லப்பட்டார்)

Its capacity to shock was one of theL.T.T.E'smost potent weapons. Friendship with theL.T.T.E. was a strange and self-flattering affair.In the course of the coming days dire hints were dropped for the benefit of several old friends who had for months sat on committees, given advice, drafted latters, addressed meetings and had placed themselves at the L.T.T.E.'s beck and call.

From: Broken Palmyra

*இலங்கையின் 7 வது பாராளுமன்றத் தேர்தல்!* நடக்கும் என்றார் நடந்து விட்டது! நடக்காது என்றார் இனி நடந்துவிடுமா?

காலையில் கடன் கழித்து வந்ததும் இடியாப்பமும் சம்பலும் கொடுத்தனர். உண்ட அரை மணி நேரத்தில் நாவல் மரத்தடியிலிருந்து ஒரு சகோதரர் அலறும் சத்தம் கேட்டது. அடிக்கும் சத்தமும், புலிவிலங்குகள் தூஷண வார்த்தைகளால் பேசும் பேச்சுக்களும் கேட்டன. இங்கிருந்த பழைய சகோதரர்களிடம் கேட்டேன், இங்கு எப்படிச் சித்திரவதைச் செய்வார்கள் என்று! சொன்னால் விளங்காது. உங்கட ரேன்ண் வரேக்க தெரிஞ்சுகொள்ளறதுதான் நல்லது என்று வெறுப்புடன் கூறினர்.

நாவல் மரத்தடியில் நடப்பவற்றை இதனுள் இருந்து பார்க்க முடியாது! விசாரணைக்கென்று வெளியில் கொண்டு போனால்தான் நாவலடி இரகசியத்தை நேரில் காணலாம். மதிய உணவுவரை நாவலடியிலிருந்து அபயக்குரல் கேட்டுக்கொண்டே இருந்தது. மதியத்துக்கு மேல் அந்தச் சகோதரர்களை அடிக்கும் சத்தமும், ஆடு, கோழி போன்றவற்றின் கழுத்தைத் திருகும் போது ஏற்படும் ஒலி போன்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தது. என்னைப் பொறுத்தவரை இவர்களது சித்திரவதை பழைய கதைதான், ஆனால் இப்போது கேட்கும் இந்த அவல ஒலியானது வித்தியாசமாக இருந்தது!

எங்களது அறை மற்றும் ஹோலினது கதவுகளைப் பூட்டிவிட்டு புலி விலங்குகள் வெளியில் தான் நிற்பார்கள். பகலில் முன்பகுதியில் பல புலிகள் நிற்பார்கள். இரவு வேளையில் பின்பகுதியிலும் காவலுக்கு நிற்பார்கள். எங்களைக் கொண்டு வந்த இரு நாட்களாக உள்ளே இருந்தவர்கள் யாரையும் புலி விலங்குகள் அடிக்கவில்லை. மூன்றாம் நாள் காலையில் பத்துப்பேர் கொண்ட குழுவொன்று உள்ளே வந்தது. பலரது கைகளில் எஸ்லோன் பைப்புகள் இருந்தன. சிலரது கைகளில் மண்வெட்டி பிடி போன்ற மரக்கட்டைகள் இருந்தன.

ஒவ்வொரு அறையாகத் திறந்து அடிப்பதற்கு ஆரம்பித்தனர். எஸ்லோன் பைப்பினுள் மணல் நிரப்பியிருந்தனர். மணல் வெளியே கொட்டிவிடாமல் இருக்க சீமெந்து போட்டு அடைத்திருந்தனர். எனது முறை வந்ததும் புண்ணியவான் திசை அதே எஸ்லோன் பைப்புடன் வந்தார். தூஷண வார்த்தைகளால் சகட்டு மேனிக்குப் பேசினார். பின்னர் அடிக்க ஆரம்பித்தார். அடிக்கும் போது நாம் அனைவரும் எழுந்து நின்று எங்கள் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு நிற்க வேண்டும். இந்த முறையானது இந்த முகாமுக்கான சட்டமாம். வலிதாங்க முடியாமல் கைகளை எடுத்தால் புலிவிலங்குகளுக்குக் கோபம் வந்துவிடும். பின்னர் அவர்களைக் கீழே தள்ளிவிழுத்தி விட்டு இரண்டு மூன்று பேர் சேர்ந்து தாக்குவார்கள். இந்த விபரங்களை முதலில் யாரும் என்னிடத்தில் கூறவில்லை. ஏனையோர் எழுந்து பின் பக்கமாகக் கைகளைக் கட்டிக் கொண்டு நின்று அடிகளை

(சாகரன்)

**வெல்லப்போவது யார்.....? பாராளுமன்றத் தேர்தல் 2010**

(சாகரன்)

***பாராளுமன்றத் தேர்தல் 2010***

**தேர்தல் விஞ்ஞாபனம் -** ***பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி***

**1990 முதல் 2009 வரை அட்டைகளின் (புலிகளின்) ஆட்சியில்......**

***நடந்த வன்கொடுமைகள்!***
(கிறேசியன், நாவாந்துறை)

***சமரனின் ஒரு கைதியின் வரலாறு***

***"ஆயுதங்கள் மேல் காதல் கொண்ட மனநோயாளிகள்."***
**வெகு விரைவில்...**

**மீசை வைச்ச சிங்களவனும் ஆசை வைச்ச தமிழனும்**

(சாகரன்)

***இலங்கையில்***

**'இராணுவ' ஆட்சி வேண்டி நிற்கும் மேற்குலகம், துணை செய்யக் காத்திருக்கும் சரத் பொன்சேகா கூட்டம்**

(சாகரன்)

***ஜனாதிபதி தேர்தல்***

**எமது தெரிவு எவ்வாறு அமைய வேண்டும்?**

-பத்மநாபா ஈபிஆர்எல்எவ்

***ஜனாதிபதித் தேர்தல்***

வாங்கிக் கொண்டு நின்றனர். அவர்களைப் பார்த்து நானும் அதுமாதிரி நின்று அடிவாங்கினேன். அடிக்கும் போது கைகளை எடுக்கக் கூடாது என்ற விபரம் தெரியாததால், நான் கைகளை எடுத்துவிட்டேன்!

திசைக்கு வந்தது கோபம், டே பாபு! வாடா இங்க! இவன் கையை எடுத்து எனக்கு அடிக்க வந்துட்டான்டா என்று பெரிதாக ஒரு பொய்யைச் சொன்னார். பாபுவும் மேலும மூன்று பேரும் பாய்ந்து வந்தனர். கண்மூடித்தனமாக அடிக்கத் தொடங்கினார்கள். காலில் விலங்கு இந்தபடியால் கால்களை எடுத்து பலன்ஸ் செய்ய முடியாமல் கீழே விழுந்தேன். பாம்பை அடிப்பது போன்று நான்கு பேரும் சேர்ந்து கட்டைகளாலும் பைப்புகளாலும் அடித்தனர். எதற்காக அடிக்கிறீர்கள் என்று யாரிடத்திலும் கேட்க முடியாது அங்கே! என்னை அடித்த அத்தனை பேரும் தூஷண வார்த்தையைத்தான் பயன்படுத்தினர்,

படித்தவர்கள் போல் தோற்றமளிக்கும் விலங்குகளும் தூஷண வார்த்தைகளைத்தான் பயன்படுத்துகின்றனர். ஒரு சகோதரனைத் தாக்குவதற்கு முன்பு தங்களைத் தயார்படுத்திக் கொள்கின்றனர். ஓர் ஆவேசத் தன்மையை ஏற்படுத்துவதற்கு இந்தத் தூஷண வாத்தைகளைப் பேசி தங்களைத் தயார் படுத்திக் கொள்கின்றனர் என்று தான் நான் நினைக்கிறேன். நாங்கள் அவர்களைப் பார்த்து எதையும் பேசப்போவதில்லை!

இரண்டு மனிதருக்கிடையில் கைகலப்பு வருவதாயின் இருவரும் வார்த்தைகளைத் தடிப்பாகப் பேச வேண்டும். தடித்த வார்த்தைகள் முற்றிய பின்னர்தான் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வார்கள். ஆனால் இங்கு ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவதற்கோ, தடித்த வார்த்தைகளைப் பயன்படுத்தித் திட்டுவதற்கோ வாய்ப்புகள் எதுவும் இல்லை! எனவே எங்களைத் தாக்குவதற்கு அவர்கள் தங்களைத் தயார்படுத்தும் வழிகளில் இந்தத் தூஷண வார்த்தைகள் முக்கிய பங்கு பெறுகிறது என்று எண்ணத் தோன்றியது. ஆதலால் இந்தக் கோழைகள் பிறரைத் தாக்குவதற்கு தமக்குத் தாமே பயன்படுத்தும் ஊக்கக் குளிசைதான் இந்தத் தூஷண வார்த்தைகள் என்று கண்டு கொள்ளலாம். மிருகத் தனமாகத் தாக்குவதற்காக தங்களைத் தாங்களே மிருகமாக மாற்றிக்கொள்வர்.

மேல்சட்டை இல்லாத எனது உடலில் அவர்கள் அடித்த அடிகள் தடித்து வீங்கி உழவு செய்த வயல்நிலம் போல் தோற்றமளித்தது தடிவி பார்க்கையில். இவர்கள் அடிக்கும் போது ஐயோ அம்மா என்று கத்தினால் அதிகமாக அடிப்பார்களா. அல்லது கத்திச் சத்தம் போட்டாமல் இருந்தால் அதிகமாக அடிப்பார்களா என்று தெரியாமல் இருந்தது. நான் இரண்டையும் செய்து பார்த்தேன்.


**ஆணை இட்ட அதிபர் 'கை', வேட்டு வைத்த ஜெனரல் 'துப்பாக்கி' ….. யார் வெல்வார்கள்?**

(சாகரன்)

**சம்பந்தரே! உங்களிடம் சில சந்தேகங்கள்.**

(சேகர்)

**அனைத்து இலங்கைத் தமிழர்களும் ஒற்றுமையான இலங்கை தமது தாயகம் என மனப்பூர்வமாக உரிமையோடு உணரும் நிலை ஏற்பட வேண்டும்.**

(அ. வரதராஜப்பெருமாள்)

*தொடரும் 60 வருடகால காட்டிக் கொடுப்பு*

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பாடம் புகட்டுவார்களா?**

(சாகரன்)

***ஜனவரி இருபத்தாறு!***

விரும்பியோ விரும்பாமலோ இரு கட்சிகளுக்குள் ஒன்றை தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்…..?

(மோகன்)

2009 விடைபெறுகின்றது! 2010 வரவேற்கின்றது!!

*'ஈழத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பாசிசத்தின் உதிர்வும், ஜனநாயகத்தின் எழுச்சியும்'*

(சாகரன்)

*சபாஷ் சரியான போட்டி.*

**மகிந்த ராஜபக்ஷ Vs சரத் பொன்சேகா.**

அந்த விலங்குகள் எதனையும் கண்டுகொள்வதாக இல்லை. கத்தினால் டே கத்திரியாடா என்று அடிக்கிறார்கள், கத்தாமல் வலியை அடக்கிக்கொண்டு மௌனமாகக் கிடந்தால் டே இவனுக்கு நோவே இல்லையாடா என்று மேற்கொண்டும் பாய்ந்து பாய்ந்து அடிக்கின்றனர்.

ஒரு வழியாக அவர்கள் களைப்புற்று வெளியேறினார்கள். என்னைப் போலவே அன்று அனைவருக்கும் இந்த விருந்தை வைத்தார்கள் புலி விலங்குகள். வழக்கமாக ஏதாவது கேள்வியைக் கேட்டுத்தான் அடிப்பார்கள். அடிக்கவேண்டும் என்பதற்காகக் கேட்கப்படும் கேள்விகள் தான் அவையும். ஆயினும் இங்கு நடப்பவை வெறும் கெட்டவார்த்தை அபிசேகமும், அடி உதைகளுமாகும். துணுக்காயில் புலி விலங்குகளுக்கும் இங்கு வரும் புலி விலங்குகளுக்கும் சிறிதளவு வித்தியாசம் தென்பட்டது. அவர்கள் கேட்டுக் கேட்டு அடிப்பார்கள் இவர்கள் கேட்காமல் அடிப்பார்கள்.

இரண்டு நாட்கள் தொடர்ந்து காலையில் வந்து அனைவருக்கும் அடித்தார்கள். மூன்றாவது நாள் புதிதாகச் சில சகோதரர்களைக் கொண்டு வந்தார்கள்.

(தொடரும்…)

(யஹியா வாஸித்)

**கூத்தமைப்பு கூத்தாடிகளும் மாற்று தமிழ் அரசியல் தலைமைகளும்!**

(சதா. ஜீ.)

***தமிழ் பேசும் மக்களின் புதிய அரசியல் தலைமை***

மீண்டும் திரும்பும் 35 வருடகால அரசியல் சுழற்சி! தமிழ் பேசும் மக்களுக்கு விடிவு கிட்டுமா?

(சாகரன்)

**கப்பலோட்டிய தமிழனும், அகதி (கப்பல்) தமிழனும்**

(சாகரன்)

***சூரிச் மகாநாடு***

(பூட்டிய) இருட்டு அறையில் கறுப்பு பூனையை தேடும் முயற்சி

(சாகரன்)

பிரிவோம்! சந்திப்போம்!! மீண்டும் சந்திப்போம்! பிரிவோம்!!

(மோகன்)

***தமிழ் தேசிய கூட்டமைப்புடன் உறவு***

பாம்புக்கு பால் வார்க்கும் பழிச் செயல்

(சாகரன்)

இலங்கை அரசின் முதல் கோணல் முற்றும் கோணலாக மாறும் அபாயம்

சாகரன்

ஈழ விடுதலைப் போராட்டமும், ஊடகத்துறை தர்மமும்

- சாகரன்

*அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே*

- அ.வரதராஜப்பெருமாள்

***மலையகம் தந்த பாடம்***

வடக்கு கிழக்கு மக்கள் கற்றுக்கொள்வார்களா? - சாகரன்

*ஒரு பிரளயம் கடந்து ஒரு யுகம் முடிந்தது போல் சம்பவங்கள் நடந்து முடிந்துள்ளன.!* - அ.வரதராஜப்பெருமாள்

**அமைதி சமாதானம் ஜனநாயகம்**
www.sooddram.com